national health authority

Ayushman Bharat Digital Mission
Building Digital Health Ecosystem

CMCHIS

TNHSP
Access, Equity, Quality

| பொய்கள் / கட்டுகதைகள் | உண்மைகள் |
| --- | --- |
| ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு சமூக பொருளாதார ரீதியாக நாட்டில் உள்ள பின் தங்கிய மக்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது. | இந்தியாவை சார்ந்த ஒவ்வொரு தனிநபரும் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கினை உருவாக்கி கொள்ளலாம். |
| சுகாதார அடையாள அட்டை மற்றும் ABHA எண் இரண்டும் வெவ்வேறு அடையாளங்களாகும். எனக்கு இரண்டு அடையாள எண்களுமே தேவை. | சுகாதார அடையாள அட்டை மற்றும் ABHA எண் இரண்டும் ஒன்றுதான். அடையாள அட்டை ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| நான் ABHA கணக்கை உருவாக்கினால் அது தொடர்பான தகவல்கள் வெளிப்படையாக கிடைக்கும். | நீங்கள் ABHA கணக்கை உருவாக்கினால் அது தொடர்பான தகவல் பொது வெளியில் கிடைக்காது. உங்களின் பரிபூரண ஒப்புதலுக்கு பிறகே நீங்கள் உங்களின் சுகாதார பதிவேடுகளை சுகாதார நிபுணர்களுக்கு பகிரலாம். |
| ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு அரசாங்க மையங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. | ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை நீங்கள் சுகாதார அடையாளமாகவும் பயன்படுத்தலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பொது அல்லது தனியார் துறையின் ஆயுஷ்மான் பாரத் மிஷனில் பதிவேடுகளை டிஜிட்டல் முறையில் இணைத்துக் கொள்ளுங்கள். |
| ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு எண்ணை பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்ட பலன்களுக்கு என்னை தகுதியிடையவராக்குகிறது. | ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு உங்களுக்கு டிஜிட்டல் முறையில் சுகாதார சேவைகளை வழங்க உதவுகிறது. இச்சேவையானது ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்தில் தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவையை போன்றதல்ல. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு எந்தவொரு நிதி ஆதாரத்திற்கும் உறுதி அளிக்கவில்லை. |
| அரசின் சுகாதார வசதிகளை பார்வையிடுவதற்கு மட்டுமே ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு உருவாக்கப்பட்டுள்ளது. | ABDM இணைய தளத்திலிருந்து ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு எண்ணை ஆன்லைனில் உருவாக்கலாம், அல்லது ஒருங்கிணைக்கப் பட்ட ABDM செயலின் வாயிலாக, அல்லது அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட சுகாதார வசதி மையங்களிலிருந்தும் உருவாக்கலாம். |

# ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் (ABDM)

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் என்பது ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட உன்னத திட்டமாகும். ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுகாதார சூழலை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தில் பதிவு செய்யும் அனைவரின் சுகாதார தரவுகளை டிஜிட்டல் ஒருங்கிணைத்து சுகாதார கட்டமைப்பை உருவாக்குவதே ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ABDM ன் கூறுகள்

### ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு

டிஜிட்டல் சுகாதார சேவைகளை எளிதில் அணுகும் வகையிலும், சுகாதார பதிவுகளை பாதுகாப்பாக சேமிக்கவும் ஒவ்வொரு தனிமனிதரின் அடையாளமாக திகழ்கிறது.

### சுகாதார நிபுணர்கள் பதிவு (HPR)

தனியார் மற்றும் பொது சுகாதார நிபுணர்களின் அனைத்து சேவைகளையும் சரிபார்க்கப்படும் பதிவேடு.

### சுகாதார வசதி பதிவேடு (HFR)

தனியார் மற்றும் பொது சுகாதார மையங்களான மருத்துவ மனைகள், பரிசோதனை மையங்கள், மருந்தகங்கள் மற்றும் சுகாதார மையங்களின் விவரங்களை சரிபார்க்கும் பதிவேடு.

### தனிநபர் சுகாதார பதிவுகளுக்கான செயலி (PHR App)

ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு செயலி, ஆரோக்கிய சேது ஆகியன ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் உடன் இணைந்து செயல்படும் செயலிகளாகும்.

### ஒருங்கிணைந்த சுகாதார முகப்பு (UHI)

சுகாதார தகவல்களை வேறுபட்ட செயலிகளில் பயன்படுத்துபவர்கள் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குபவர்களுக்கு இடையே தடையற்ற தொடர்பு மற்றும் பரிமாற்றத்தை செயல்படுத்தும் ஒரு முகப்பாகும்.

# ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு (ABHA)

# ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை உருவாக்குங்கள் டிஜிட்டலாக மாறிவிடுங்கள்!




ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு என்பது 14 இலக்க தனித்துவமான சுகாதார அடையாளம் ஆகும். தனிநபரின் பதிவுகளை டிஜிட்டல் முறையில் இணைக்கவும், அணுகவும் மற்றும் பகிரவும் உதவிகரமாக உள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை பெறுவது எப்படி?

1. ஆயுஷ்மான் பாரத் சுகாதார எண்ணை உருவாக்க சொடுக்குக.
2. ஆதார் எண்ணை பயன்படுத்தி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கினை உருவாக்கங்கள்.
3. அங்கீகரிக்கப்பட்ட ஆதார் மற்றும் கைபேசி எண்ணை பயன்படுத்தி ஒரு முறை கடவு எண் (OTP)ஐ பெற்றிடுங்கள்.
4. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கிற்கான முகவரியை உருவாக்குங்கள் அல்லது தேர்வு செய்யுங்கள்.
5. ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை சமர்ப்பி என்ற பொத்தானை சொடுக்கி பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

* ஒருவேளை உங்களின் கைப்பேசி எண் ஆதார் எண்ணுடன் இணைக்கப் படவில்லையெனில் அருகிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் சுகாதார வசதி மையத்திற்கு சென்று உங்களின் OTPக்கு பதிலாக பயோமெட்ரிக் அங்கீகாரம் மூலம் ஆயுஸ்மான் பாரத் சுகாதார கணக்கினை பெற்றிடுங்கள்.